மக்கள் குரல்
நடுநிலை நாளேடு
06.09.2019,பக்கம்-7

# பள்ளி, கல்லூரிகளில் ஆசிரியர் தின கொண்டாட்டம்



கேபிஆர் பொறியியல் கல்லூரி

கோவை, செப். 6–

## கேபிஆர் பொறியியல் கல்லூரி

கேபிஆர் பொறியியல் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரியில் ஆசிரியர் தின விழா நடைபெற்றது.

ஒவ்வொரு துறை சார்பிலும் தனித்தனியாக துறை மாணவர்கள் அவர்களது ஆசிரியர்களுக்காக பல்வேறு நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்திருந்தனர். விழாவில், மரபின் மைந்தன் முத்தையா கலந்து கொண்டு உரையாற்றினார்.

இதில், கேபிஆர் குழுமங்களின் தலைவர் கே.பி.ராமசாமி, கேபிஆர் பொறியியல் கல்லூரியின் முதல்வர் கே.பொம்மண்ண ராஜா, முதன்மை செயலர் ஏ.எம்.நடராஜன், கேபிஆர் நிறுவனங்களின் பொது மேலாளர் முனுசாமி, கலை அறிவியல் மற்றும் ஆராய்ச்சி கல்லூரியின் முதல்வர் பாலுசாமி மற்றும் அனைத்துத்துறை தலைவர்கள், பேராசிரியர்கள் கலந்து கொண்டனர். இதில் ஒவ்வொரு துறையிலும் மாணவர்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட சிறந்த ஆசிரியர்களுக்கு பரிசு, சான்றிதழ்கள் வழங்கப்பட்டது.

கோவை குனியமுத்தூரில் உள்ள கிருஷ்ணா பொறியியல் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரி, கிருஷ்ணா கலை அறிவியல் கல்லூரி, கோவைப்புதூர் கிருஷ்ணா தொழில்நுட்ப கல்லூரி, கிருஷ்ணா பாலிடெக்னிக் மற்றும் கிருஷ்ணா ஆதித்யா கல்லூரிகளில் ஆசிரியர் தினம் பல்வேறு நிகழ்ச்சிகளுடன் அனுசரிக்கப்பட்டது. ஆசிரியர்களுக்கு மாணவர்கள் வாழ்த்து மடலுடன், கேக் வெட்டி, மலர் கொத்து கொடுத்து வாழ்த்து தெரிவித்தனர். மாணவர்கள் கையெழுத்து இயக்கத்தினை நடத்தினர், மேலும் ஆசிரியர்களுக்கு பல்வேறு போட்டிகள் நடத்தப்பட்டது.

இறுதியில் ஆசிரியர்கள் உறுதி மொழி எடுத்து கொண்டாடினர்.

கல்விக்குழுமங்களின் நிர்வாக அறங்காவலர்எஸ்.மலர்விழி, முதன்மை நிர்வாக அதிகாரி கே.சுந்தரராமன் ஆகியோர், கல்வி குழுமங்களின் முதல்வர்களுக்கு, பேராசிரியர்களுக்கு வாழ்த்து தெரிவித்தனர். இதில், கல்வி குழுமங்களின் முதல்வர்கள் ஜே.ஜேனட், பேபி ஷகிலா, ஸ்ரீனிவாசன் ஆளவந்தார், பன்சால் ராஜ்குமார், பழனியம்மாள் மற்றும் பேராசிரியர்கள் கலந்து கொண்டனர்.


கிருஷ்ணா கல்வி குழுமம்